

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (13.02.2025) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், நல்லவன்பாளையம் ஊராட்சியில் இலங்கை தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாம்களில் புதிய வீடுகள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில்

# புதிய வீடுகள் கட்டும் பணி!

### அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, பிப்.15-

அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நேற்று முன்தினம் (13.2.2025) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், நல்லவன்பாளையம் ஊராட்சியில் இலங்கை தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாம்களில் புதிய வீடுகள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முதலமைச்சர் அவர்கள் இலங்கை தமிழர்களின் நலன் கருதி அவர்களுக்கு பாதுகாப்பு நிதி, மானியத்தில் அரிசி, விலையில்லா சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் மானிய விலையில் எரிவாயு உருளை, வாழ்க்கை தர மேம்பாட்டு நிதி, வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல், கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல உதவிகளை செய்து வருகிறார்கள்.

அந்த வகையில் இன்றைய தினம் இலங்கை தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாம்கள் வீடுகள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கின்ற நிகழ்வு நடைபெறுகிறது.

**அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!**

இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்ததாவது:

தமிழக அரசின் சார்பாக இலங்கை தமிழர்களுக்கு தமிழ்நாட்டில் புகலிடங்கள் அளிக்கப்பட்டு, பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. அந்த வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் தமிழ்நாட்டில் 100க்கும் மேற்பட்ட முகாம்களில் வசித்த இலங்கை தமிழர்களுக்கு பல்வேறு உதவிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அவர்களின் ஆட்சிகாலத்தில் நான் உணவுத்துறை அமைச்சராக பதவி வகித்த பொழுது, ஈழத் தமிழர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கி, பொது விநியோக கடைகளில் உணவுப் பொருட்களை பெறுவதற்கு ஆணையிட்டார்கள். அதனடிப்படையில் அவர்களுக்கு முதன் முதலாக குடும்ப அட்டைகளை வழங்குவதற்கு முன்னெடுத்தேன்.

அது மட்டுமின்றி தமிழ்நாட்டில் முதன் முதலாக இலங்கை தமிழர்களின் பிள்ளைகளை மருத்துவம், பொறியியல், விவசாய கல்லூரி, பாலிடெக்னிக் உள்ளிட்ட பட்டம் மற்றும் பட்டய படிப்புகள் படித்து பட்டதாரிகளாக மாற ஆணை பிறப்பித்து உதவி செய்தார்கள். மேலும் பொங்கல் விழா காலங்களில் வேட்டி, சேலைகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

**ரூ.40 கோடியில் 694 வீடுகள்!**

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஈழத் தமிழர்களுக்கு நிரந்தரமாக இல்லங்கள் கட்டி கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை செயல்படுத்தினார்கள். அதனடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள 38 வருவாய் மாவட்டங்களிலும் கான்கிரீட் வீடுகள் கட்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தச்சூர் ஊராட்சியில்111குடும்பங்களுக்கு ரூ. 2 கோடியே 90 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், சொரகுளத்தூர் ஊராட்சியில் 92 வீடுகளும், கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், தென்பள்ளிப்பட்டு ஊராட்சியில் 160 வீடுகளும், போளூர் ஊராட்சி ஒன்றியம், கஸ்தாம்பாடி ஊராட்சியில் 250 வீடுகளும், செய்யாறு ஊராட்சி ஒன்றியம், பாப்பந்தாங்கல் ஊராட்சியில் 80 வீடுகளும் மற்றும் தவசி ஊராட்சியில் 32 வீடுகளும், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், ஒசூர் ஊராட்சியில் 50 வீடுகள் என மொத்தம் ரூ. 40 கோடி மதிப்பீட்டில் 694 வீடுகள் இலங்கை தமிழர்களுக்கு கட்டப்படுகிறது.

மேலும் திருவண்ணாமலை மாநகராட்சி, அடிஅண்ணாமலை மற்றும் அத்தியந்தல் ஊராட்சியிலும் இலங்கை தமிழர்கள் வசித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே அடிஅண்ணாமலை பகுதியில் வசிக்கின்ற 60 இலங்கை தமிழர்களுக்கு நல்லவன்பாளையம் ஊராட்சியில் வீடுகள் கட்டுவதற்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அத்தியந்தல் பகுதியில் வசிக்கின்ற 76 இலங்கை தமிழர்களுக்கு கணத்தம்பூண்டி ஊராட்சியில் வீடுகள் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டு, அடிக்கல் நாட்டப்படும். எனவே இலங்கை தமிழர்களுக்கான வீடுகள் விரைவாக கட்டப்படும்.

இவ்வாறு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இலங்கை தமிழர்கள் நலன் கருதி அடிஅண்ணாமலை பகுதியில் வசிக்கின்ற 60 குடும்பங்களுக்கு ஒரு தனிவீட்டின் மதிப்பீடு ரூ.8 இலட்சத்து 10 ஆயிரத்து 390 மதிப்பீட்டில் 8 வீடுகள் கொண்ட யூனிட் 1க்கு ரூ.64 இலட்சத்து 83 ஆயிரத்து 118 மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இராம்பிரதீபன், திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் காந்திராஜ், திருவண்ணாமலை மாநகராட்சி மேயர் திருமதி நிர்மலா வேல்மாறன், திருவண்ணாமலை வட்டாட்சியர் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள அரசு விழாவின் முன்னேற்பாடு பணிகள் குறித்து கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் இரா.சரண்யா, மாநகராட்சி ஆணையாளர் மரு.எஸ்.அனு உட்பட பலர் உள்ளனர்.

# கடலூர் வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

### கடலூர் கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

கடலூர், பிப்.13-

கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்,12.02.2025, புதன்கிழமை, மாலை 5 மணி அளவில், காட்டுமன்னார் கோவில், பெருந்தலைவர் எம்.ஆர்.கே. கூட்ட அரங்கத்தில், கழக மாவட்ட கழக துணை செயலாளர் அ.ஞானமுத்து தலைமையில் நடைபெற்றது.

கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கழக பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர். கே.பி.கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

இந்திய துணைக் கண்டத்து முதல்வர்களில் முதன்மையானவர் என இந்திய தலைவர்களால் போற்றப்பட்டு தமிழ்நாட்டுக்கு திராவிடரியகத்திற்கு பெருமை சேர்த்து தன் உழைப்பால், ஆற்றலால், அன்பான பண்புமிகு உள்ளத்தால் அறியதொரு செயல்களால் உலகமே பராட்டிடும் நம் ஆருயிர்த் தலைவர் தளபதியின் பிறந்தநாள் மார்ச் 1 அன்று நமக்கு மகிழ்வு நாள். கடலூர் கிழக்கு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் மக்கள் மகிழும் வண்ணம் மாணவ, மாணவியர் நலன்கள், மருத்துவ முகாம்கள் என கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், 395 ஊராட்சி, 267 வார்டு ஆக மொத்தம் 662 இடங்களில் கழக கொடியேற்றி அனைத்து கழக நிர்வாகிகளும், கிளைக் கழகங்களிலும், அணிகளின் சார்பிலும் சிறப்பாக கொண்டாடுவது என முடிவுச் செய்யப்பட்டது.

முதல்வர் - கழக தலைவர் தளபதி அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை தரும் 21.02.2025 வெள்ளிக்கிழமை, 22.02.2025 சனிக்கிழமை அன்று பெருமைமிகு அந்நாளில் நடை பெறவுள்ள வரவேற்பு, கழக நிகழ்வுகள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும், திராவிட மாடல் அரசினால் முடிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு திறப்பு விழாக்களில் கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் அறிவித்திடும் வண்ணம் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கழக தோழர்களுடன் மாவட்ட கழக செயலாளர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து அனைவரும் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்தியாவின் இரும்பு தலைவர் முதல்வர், கழக தலைவர் தளபதி அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை தரும் 21.02.2025 வெள்ளிக்கிழமை, 22.02.2025 சனிக்கிழமை அன்று மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர், கிளை, வார்டு கழகங்களின் சார்பில் கழக தலைவர் அவர்களின் பயணத் திட்டத்தின் படி வழிநெடுகிலும் வரவேற்பு அளிப்பது என தீர்மானிக்கப்படுகிறது.

முதல்வர் - கழகத் தலைவர் தளபதி அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து 22.02.2025 சனிக்கிழமை அன்று கடலூர் மஞ்சை நகர் மைதானத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் இருந்து பெருந்திரளாக கலந்து கொள்வது என தீர்மானிக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர்கள் ஆர்.சக்திவேல், சுதாசம்பத், ஒன்றிய செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய வி.சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, திருமுட்டம் கிழக்கு தங்க.ஆனந்தன், பரங்கிப்பேட்டை வடக்கு முத்து.பெருமாள், குமராட்சி மத்திய ஆர்.ராஜேந்திரன், குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி தெற்கு ம.சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, குமராட்சி மேற்கு கே.நடராஜன், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர். கலையரசன், கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி. சுப்பிரமணியன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், புவனகிரி கிழக்கு எம். மனோகரன், புவனகிரி மேற்கு ஏ.எஸ்.மதியழகன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கோவிந்தராஜ், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா,

கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன் எஸ். சலீம், மூ.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜய ராகவன், ச.கல்யாணசுந்தரம், விபி.பாலு, மு.வெற்றிவேல், பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், சேத்தியாதோப்பு ப. மனோகரன், திருமுட்டம் பூ.செல்வகுமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நெல் கொள்முதல் நிலையங்களில்

# நாளொன்றுக்கு 1000 மூட்டைகள் கொள்முதல் செய்திட வேண்டும்!

### ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி வலியுறுத்தல்!



சென்னை, பிப். 15 -

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில் உணவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டத்தில், கடந்த ஆண்டுகளில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் செயலாக்கத்தைப் பற்றியும் வரும் ஆண்டிற்கான அறிவிப்புகள் பற்றியும் கேட்டறிந்தார். நெல் கொள்முதல், நெல் இருப்பு மற்றும் நகர்வு பற்றி ஆய்வு செய்தார். நெல் கொள்முதலில் தற்போதுள்ள நடைமுறைப்படி நாளொன்றுக்கு ஒவ்வொரு நெல் கொள்முதல் நிலையத்திலும் கொள்முதல் செய்யப்படும் உச்ச வரம்பினை 32 டன்னிலிருந்து (800 மூட்டைகள்) 40 டன்னாக (1000 மூட்டைகள்) உயர்த்திக் கொள்முதல் செய்ய அறிவுறுத்தினார். நெல் விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு ஏக்கருக்குத் தற்போது நிர்ணயித்துள்ள 2400 கிலோ (60 மூட்டைகள்) நெல்லினை 2800 கிலோவாக (70 மூட்டைகள்) உயர்த்திடவும் அறிவுறுத்தினார். நெல் கொள்முதல் நிலையங்களில் அதிகமான நெல் வரத்து இருந்தால், இரண்டு இயந்திரங்கள் வைத்து நெல் கொள்முதல் செய்திடவும் கூறினார்.

பொது விநியோகத் திட்ட அங்காடிகளில் பொதுமக்களுக்கு கனிவான முறையில் சேவை செய்திடவும் அனைத்துப் பொருட்களையும் தரத்துடன் ஒரே நேரத்தில் வழங்கிடவும் கடைகளுக்கு வரும் பொருட்களின் எடை சரியாகவும் வழங்கப்படும் பொருட்களின் எடை சரியாக இருப்பதையும் ஆய்வு அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

மாநில எல்லையோரங்களில் அரிசிக் கடத்தலைத் தடுத்திட கண்காணிப்புப் பணியைத் தீவிரப்படுத்திடவும், டீசல் கலப்பினை நிறுத்திடவும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத்துறையின் காவல்துறை அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பயன்பாட்டினை அதிகப்படுத்தி விவசாயிகளுக்கும் வணிகர்களுக்கும் அதிக அளவில் சேவை செய்து வருமானத்தை அதிகப்படுத்திடவும் அறிவுரை வழங்கினார்.

ஆய்வுக்கூட்டத்தில், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ.சண்முக சுந்தரம், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் த.மோகன், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் சா.ப. அம்ரித், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை காவல்துறைத் தலைவர் ரூபேஷ் குமார் மீனா, மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி கந்திலி ஒன்றியத்திற்குட்பட்ட உடையமுத்தூர்– ரகுபதியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு நபார்டு திட்டத்தின் மூலம் 32 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடம் மற்றும் செவ்வத்தூர் ஊராட்சி செவ்வத்தூர்புதூர் பகுதியில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட 15வது நிதி குழு மூலம் 42 இலட்சம் மதிப்பிட்டில் புதிய கட்டிடம் கட்ட அ.நல்லதம்பி அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். ஒன்றிய குழு தலைவர் திருமதிதிருமுருகன், ஒன்றிய செயலாளர்கள் கே.ஏ.குணசேகரன்,கே.ஏ.மோகன்ராஜ், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் தசரதன்,சீனிவாசன், சந்திரசேகர், சர்க்கரை, லட்சுமிசந்திரசேகர், அ.செல்வி, தணிகாசலம், குலோத்துங்கன், கார்த்திக் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

